அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.195/2015
தேதி.15.8.2015

## சமத்துவ மக்கள் கட்சியின் சுதந்திரதின விழா கொண்டாட்டம்
# ச.ம.க. நிறுவனர் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் 69 வது சுதந்திரதினவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை 10 மணியளவில் கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கினார்.

அதையடுத்து கட்சியின் தலைமை அலுவலகத்தில் உள்ள மகாகவி பாரதி அரங்கில் இந்திய சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்டு தங்கள் இன்னுயிர் நீத்த வீரர்கள் மற்றும் தியாகிகள் குறித்த குறும்படம் ஒன்று திரையிடப்பட்டது. விடுதலை போராட்ட வீரர்கள் குறித்த குறும்படத்தின் குறுந்தகடுகள் அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கப்பட இருப்பதாக கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்கள் அறிவித்தார். இந்நிகழ்ச்சிகளில் துணைத் தலைவர் ஏ.நாராயணன் எம்.எல்.ஏ, பொதுச்செயலாளர் கரு.நாகராஜன், பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், கொள்கை பரப்பு செயலாளர் ஆர்.ஜெயப்ரகாஷ், மாநில இளைஞரணிச் செயலாளர் சாம் மேத்யூ, மாநில மகளிரணிச் செயலாளர்கள் ம.ரா.ஜெமிலா, எம்.பாகீரதி, மாநில இளைஞரணி துணைச்செயலாளர்கள் டி.மகாலிங்கம், பி.ஆர்.ஆர்.சுந்தர், சென்னை மண்டலச் செயலாளர் எம்.ஏ.சேவியர், மாவட்டச்செயலாளர்கள் சி.ராஜா, எம்.உதயக்குமார், எஸ்.பிரசாத், மற்றும் தொகுதிச்செயலாளர்கள் பகுதிச்செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டார்கள்

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்

**இத்துடன் படம்**
**அனுப்பப் பட்டுள்ளது**